**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 158** **நாள் : 04.07.2025**

**சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0வின் ஒரு பகுதியாக, சென்னை பள்ளிகளில் பயிலும் 900 மாணவர்கள் பங்கேற்ற கழிப்பறை குறித்த பல்வேறு விழிப்புணர்வுப் போட்டிகள் சென்னை கலைவாணர் அரங்கில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப், தூய்மை மிஷன், சியர் மற்றும் ரீசைக்கிள் பின் அமைப்புகள் இணைந்து நடத்தும் சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0வின் ஒரு பகுதியாக, பள்ளி மாணவர்களுக்காக சென்னை கலைவாணர் அரங்கில் "டாய்லெட்-ல டண்டனக்கா" நிகழ்ச்சி இன்று (04.07.2025) நடைபெற்றது. இந்நிகழ்ச்சி மாஸ்டரிங் கேம்பஸ் கேரியருடன் (Mastering Campus Carriers (MC2)) இணைந்து வடிவமைத்து ஒருங்கிணைக்கப்பட்டது.

சென்னை நடுநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு "**கழிப்பறை வெறும் இடம் மட்டுமல்ல**" என்ற தலைப்பில் படத்தொகுப்புப் போட்டியும், "**எல்லாத்தையும் மாற்றிய கழிப்பறை**" என்ற தலைப்பில் கதை எழுதுதல், "**ஏன் சுத்தமான கழிப்பறை முக்கியம்**" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி, "**எல்லாருக்குமான கழிப்பறை**" என்ற தலைப்பில் கழிவுப் பொருட்களை கொண்டு கழிவறை செய்தல், "**தைரியமாக பேசு, சுத்தமாக யோசி, மாற்றத்திற்கு வழிநடத்து**" என்ற தலைப்பில் இளம் பேச்சாளர்களுக்கான தேடல், "**மாற்றத்தை நிலைநாட்ட**" என்ற தலைப்பில் நாடகம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இந்தப் போட்டிகளில் 250 பள்ளிகளைச் சார்ந்த 900 மாணவ, மாணவியர் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ, மாணவியருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., அவர்கள் பரிசுக் கோப்பை, பதக்கம் மற்றும் சான்றிதழையும் போட்டியில் பங்கேற்ற இதர பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**